**In the Court of the Judicial Magistrate No.II**

**Kovilpatti.**

**DEPOSITION OF WITNESS**

**C.C.246-2018**

PW4 16.11.2018

Name *ராமையாபாண்டி*

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

*நான் குப்பணாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன்.நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். கடந்த 03ம்தேதி மாதம் சரியாக ஞாபகம் இல்லை 2018 ஆண்டில் அய்யனார் ஊத்துவில் இருந்து எங்கள் ஊருக்கு சென்று கொண்டிருந்தேன். எங்கள் ஊரை சாாந்த அ.சா.1 அழுது கொண்டு இருந்தது என்னவென்று நான் கேட்டேன்.அப்பொழுது அ.சா1 தான் அய்யனர்ஊத்துவிற்கு போஸ்ட் ஆபிசு சென்று வந்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த இரு நபர்கள் அ.சதா.1 அணிந்திருந்த தங்கசெயினை பறித்து கொண்டு சென்றார்கள் வெளியே சொன்னால் கழுத்தை அறுத்து விடுவேன் என்று சொன்னார்கள் என்று சொன்னார் பின்னர் அ.சா.1யை ஊருக்கு அழைத்து சென்று பின்னர் சம்பவம் பற்றி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்*

*குறுக்கு விசாரணை*

*அ.சா.1 என்னுடைய மாமா மகள் ஆவார்.சம்பவம் இடமானது விவசாயம் இடம் என்றால் சரிதான் அங்கு எப்பொழுதும் நிறைய மக்கள் இருப்பார்கள் என்றால் சரிதான்.நான் போஸ்ட் ஆபிசிற்கு செல்லும்பொழுது தான் அ.சா.1 சம்பவம் பற்றி என்னிடம் சொன்னார்.அப்பொழுது நேரம் 2.30 மணி இருக்கும்.சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது.சம்பவம் பற்றி போலிசார் என்னை பின்னர் விசாரித்தார்கள்.அ.சா.1ன் செயின் அறுந்து விட்டதால் அவருடைய அப்பா*

திருநெல்வேலி சென்று வேறு செயினை மாற்றி வாங்கி வந்தார் என்றால் சரிதான் வழக்கில் தாக்கல் செய்த புதியதாக வாங்கிய செயின் என்றால் சரிதான்.அ.சா.1 ஒரு நபர் தன்னுடைய செயினை திருடியதாகத்தான் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான்.நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சம்பவம் இடத்திற்கு போனதாக சொன்னது சம்பவத்தை கேள்விபட்டதாக சொன்னது உண்மையல்ல என்று சொன்னதால் சரியல்ல அ.சா.1 எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) அ.தாவூத் அம்மாள்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.

**In the Court of the Judicial Magistrate No.II**
**Kovilpatti.**
**DEPOSITION OF WITNESS**
**C.C.246-2018**

PW5 16.11.2018

·Name செல்வம்

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

நான் கயத்தாரில் குடியிருந்து வருகிறேன்.நான் சைக்கிள் ஸ்டாண்ட் வைத்துள்ளேன் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ.2 மற்ற விபரங்கள் எதுவும் தெரியாது

அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது

என்னை போலிசார் விசாரித்தார் என்றும் போலிசார் விசாரணையில் கடந்த 03.03.2018 அன்று 19.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவம் இடத்தை கயத்தார் காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வைமகஜர் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் எங்கள் ஊரை சார்ந்த கோட்டைசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) அ.தாவூத் அம்மாள்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.